DECEMBER 2023 **P/ID 35329 /PTL4V**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. அது என்பது எந்தப் பால் சார்ந்தது?

2. வந்தோள் என்னும் சொல்லில் ஏற்பட்ட திரிபு யாது?

3. விரவுவினை குறித்து எழுதுக.

4. பேசுகின்றார் என்னும் சொல்லிலுள்ள இடைச்சொற்களை எழுதுக.

5. தாயை என்பதிலுள்ள இடைச்சொல் எது?

6. ஒப்பில் போலி எந்தப் பொருளில் பயிலும்?

7. குறைச்சொற் கிளவி எவ்வாறு அமையும்?

8. மாநகர் – பொருள் கூறுக.

9. 'புலம்பு முத்து' – புலம்பு எந்த வகைச் சொல்?

10. அடிமறிப் பொருள்கோள் எவ்வாறு இயலும்?

11. எச்சவியலின்படி, 'கேணி' என்பது எந்த வகைச் சொல்?

12. தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. வினா காலமொடு தோன்றுமாற்றை விளக்குக.

14. 'மூன்றே பலவற்றுப் படர்க்கை' – விளக்குக.

15. வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

16. ஓகார இடைச்சொல் உணர்த்துகின்ற பொருளைப் பட்டியலிடுக.

17. 'உணர்ச்சி வாயில் உயர்வோர் வலித்தே' என்று உரியியல் கூறுவதை விளக்குக.

18. திரிசொல் குறித்து நீர் அறிவன யாவை?

19. 'சொல் வழக்கு வரையறை' குறித்து எச்சவியல் கூறுவனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. உமது பாடப் பகுதியில் அறியலாகும் தொடரியல் செய்திகளை விளக்குக.

21. உரிச்சொல் இலக்கணம் விளக்குக.

22. ‘கடிசொல் இல்லை காலத்துப்படினே’ – கருத்துரைக்க

23. சொல்லதிகாரப் புறனடை நூற்பா உணர்த்தும் செய்தி யாது? விளக்குக.

24. முறைப்படி எண்ணி, தொல்காப்பியம் திறம்பட ஆக்கப்பட்டதை நிறுவுக.

———————